# UYEGP SCHEME FAQS

| QUESTION/ கேள்வி | ANSWER/பதில்; |
|---|---|
| 1.UYEGP திட்டத்தின் கீழ் பயன் பெற தேவையான தகுதிகள் என்ன?<br><br>1.What are the eligibility norms to get benefitted under this scheme? | 18 வயது பூர்த்தி அடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம். பொது பிரிவினராக இருப்பின் 35 வயதிற்குள்ளும், சிறப்பு பிரிவினராக இருப்பின் 45 வயதிற்குள்ளும் இருத்தல் வேண்டும். குறைந்தபட்ச கல்வித்தகுதி 8–ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருத்தல் அவசியம். விண்ணப்பதாரர் குறைந்தபட்சம் 3 ஆண்டுகள் அந்த மாவட்டத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும். குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1,50,000/ –க்கு மிகாமல் இருக்க வேண்டும்.<br><br>Any individual, above 18 years of age. Upper age limit for General Category is 35 years and for special category 45 years.Minimum Educational qualification is Pass in VIII Standard.The applicant should be a resident of the place for not less than 3 years.The family income of the beneficiary along with the spouse should not exceed Rs.1,50,000/- per annum. |
| 2.UYEGP திட்ட மதிப்பீட்டில் அடங்கும் செலவினங்கள் என்ன?<br><br>2.What is the component of Project cost? | மூலதனக்கடன் , நடைமுறை மூலதனம் மற்றும் சொந்த முதலீடு ஆகியவை அடங்கும்.<br><br>Capital expenditure loan, one cycle of working capital and 10% of project cost as own contribution in case of general category and 5% of project cost in case of special category loan |
| 3.இடம் மற்றும் கட்டிடத்தின் மதிப்பு மொத்த திட்ட மதிப்பில் அடங்குமா?<br><br>3.Whether cost of land and building included in project cost? | அடங்காது .<br><br>No. |
| 4. இத்திட்டத்தில் கடன் பெற தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி அவசியமா?<br><br>4.Whether EDP training is compulsory? | ஆம். அவசியம்<br><br>Yes |
| 5. இத்திட்டத்தில் கடன் பெற சொத்து ஜாமீன் செய்திட வேண்டுமா?<br><br>5.Whether Collateral security is mandatory? | இந்திய ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதலின் படி ரூ.10.00 இலட்சம் வரையிலான கடன் திட்டத்திற்கு சொத்து ஜாமீன் செய்திட வேண்டியதில்லை. மேலும் இவ்வகை திட்டங்களை மத்திய அரசின் CGTMSE திட்டத்தில் இணைத்து பிணையம் இன்றி கடன் பெறலாம்.<br><br>As per RBI guidelines, the Project Cost up to Rs 10.00 lakhs under UYEGP loans are free from Collateral Security. The Project can very well be covered under CGTMSE also. |
| 6.ஏற்கனவே தொழில் துவங்கி நடைபெற்று வரும் நிறுனத்திற்கு கடன் பெற இயலுமா?<br><br>6.Whether existing unit can avail loan under UYEGP? | கடன் பெற இயலாது. புதிதாக துவங்கப்பட இருக்கும் நிறுவனத்திற்கு மட்டும் கடன் பெற இயலும்.;<br><br>No. Only new unit. |

| | |
|---|---|
| 7.இத்திட்டத்தில் கடன் பெற விண்ணபத்துடன் இணைக்கப்பட வேண்டிய சான்றிதழ்கள்/ஆவணங்கள் யாவை?<br><br>7.What are the Certificates /Documents to be attached with this application? | முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் கீழ்க்காணும் சான்றிதழ்கள்/ஆவணங்கள் இணைக்கப்பட வேண்டும்.<br>• கல்வித்தகுதிக்கான சான்றிதழ் (மாற்றுச்சான்றிதழ்/பள்ளி பதிவுத்தாள் நகல்)<br>• விலைப்பட்டியல் மற்றும் திட்ட அறிக்கை<br>• இருப்பிட முகவரிக்கான சான்றிதழ்கள்/ஆவணங்கள் (குடும்ப அடையாள அட்டை அல்லது வருவாய்த்துறையினரால் வழங்கப்படும் இருப்பிடச்சான்று)<br>• சாதிச்சான்றிதழ்<br>• முன்னாள் இராணுவத்தினராக இருப்பின் அதற்குரிய ஆவணங்கள் மாற்றுத்திறனாளியாக இருப்பின் அதற்குரிய ஆவணங்கள்.<br>The beneficiary shall submit application along with project profile and Quotation at the respective District Industries Centre with copies of certificates in proof of<br>• Educational qualification(Transfer Certificate / School Record Sheet copy)<br>• Quotation and Project Report<br>• Nativity ( Copy of Ration card or Nativity certificate obtained from Revenue Department authority)<br>• Community<br>• Ex-servicemen (wherever applicable)<br>• Proof for Differently-Abled (Whereever applicable) |
| 8. UYEGP திட்டத்தை அமல்படுத்தும் அரசு நிறுவனம் எது?<br><br>8.Which is the agency implementing the scheme at District Level? | மாவட்ட அளவில் மாவட்ட தொழில் மையம், சென்னையில் மண்டல இணை இயக்குநர் அலுவலகம், தொழில் வணிகத்துறை.<br><br>District Industries Centres (DICs) of the concerned Districts and the Office of the Regional Joint Director of Industries and Commerce in respect of Chennai District will be the implementing agencies for the Scheme. |
| 9. இத்திட்டத்தில் கடன் பெற தகுதியான திட்டங்கள்/தொழில் துவங்க இருக்கும் இடம் பற்றிய விவரம்?<br><br>9.What are all the activities / area covered under this scheme? | பொருளாதார ரீதியில் சாத்தியமாக உள்ள உற்பத்தி, சேவை மற்றும் விற்பனை சார்ந்த தொழில்கள் அனைத்திற்கும் இத்திட்டத்தில் கடன் பெறலாம். வேளாண் சார்ந்த தொழில்கள், எடுத்துக்காட்டாக பயிர் வளர்ப்பு, ஆடு, மாடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு,மீன் வளர்ப்பு, பட்டுப்புழு வளர்ப்பு போன்றவைகளுக்கு இத்திட்டத்தில் கடன் பெற இயலாது.<br><br>நகர்புறம் மற்றும் கிராமப்புறம் உள்ளிட்ட தமிழ் நாட்டின் அனைத்து பகுதிகளிலும் தொழில் துவங்கலாம்.<br><br>The scheme is applicable to all areas in the State including Rural and Urban Areas. All economically viable Manufacturing, Service and Business Activities excluding direct Agricultural operations like raising of crops etc., |

| | |
|---|---|
| *10.இத்திட்டத்தில் கடன் பெற தகுதியான வங்கிகள் பற்றிய விவரம்?*<br><br>***10.Which banks are covered under this scheme?*** | *தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் அனைத்தும்*<br><br>*தனியார் வங்கிகள்*<br><br>*தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கிகள்*<br><br>***All Nationalized Banks***<br><br>***Private Sector Banks and***<br><br>***Tamil Nadu Industrial Co-operative Bank*** |
| *11. தொழில் வகைப்பாடு வாரியாக அதிகபட்ச திட்ட மதிப்பு என்ன?*<br><br>***11.What is the maximum project cost under each category?*** | • *உற்பத்தி சார்ந்த தொழில்களுக்கு ரூ.10.00 இலட்சம்;*<br>• *சேவை சார்ந்த தொழில்களுக்கு ரூ.3.00 இலட்சம்;*<br>• *விற்பனை சார்ந்த தொழில்களுக்கு ரூ.1.00 இலட்சம்;*<br>• ***Rs. 10.00 lakhs for Manufacturing Sector***<br>• ***Rs.3.00 lakhs for Service Sector***<br>• ***Rs.1.00 lakh for Business Sector.*** |
| *12.இத்திட்டத்தில் கடன் பெற தொழில் முனைவோரது பங்கீடு என்ன?*<br><br>***12.What should be the promoter's contribution?*** | *பொது பிரிவினராயிருப்பின், திட்ட மதிப்பீட்டில் 10 சதவீதம் சொந்த முதலீடு செய்ய வேண்டும்.*<br><br>*சிறப்பு பிரிவினராயிருப்பின், (பட்டியல் இனத்தவர்/ பழங்குடியினர்/பிற்படுத்தப்பட்டோர்/மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/ சிறுபான்மையினர்/பெண்கள்/முன்னாள் இராணுவத்தினர்/மாற்றுத்திறனாளிகள்/திருநங்கையர்) 5 சதவீதம் சொந்த முதலீடு செய்ய வேண்டும்.*<br><br>***10% on the Project Cost for General Category as Promoter's contribution.***<br><br>***5% on the Project Cost for Special Category (viz. Scheduled Caste / Scheduled Tribe / Backward Classes / Most Backward Classes / Minorities / Women / Ex-servicemen / Physically Challenged / Transgender) as owners' contribution.*** |
| *13.திட்ட மதிப்பீட்டில் எவ்வளவு தொகை வரை வங்கிகளில் கடன் கோரலாம்?*<br><br>***13.How much contribution will have to be made from the bank towards project cost?*** | *திட்ட மதிப்பீட்டில் அரசு மானிய தொகை 25 சதவீதம் உட்பட 90 முதல் 95 சதவீதம் வரை வங்கிகளில் கடன் கோரலாம். 90–95 சதவீதம் திட்ட வங்கிகள் கடனாக கோரலாம்.*<br><br>***Amount of the Bank Loan is 90-95% loan of the project cost. (Including Government Subsidy of 25%). Bank should release 90-95% of the project cost as loan and then claim subsidy*** |
| *14. வங்கிகளில் இத்திட்டத்திற்கு பெறும் கடன் தொகைக்கு செலுத்த வேண்டிய வட்டி விகிதம் எவ்வளவு?*<br><br>***14.What is the rate of interest charged under UYEGP scheme?.*** | *இந்திய ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதலின்படி வங்கிகள் கடைபிடிக்கும் வட்டி விகிதம்*<br><br>***The rate of interest is as per the guidance of RBI.*** |

| | |
|---|---|
| | |
| 15. கடன் தொகையை திரும்ப செலுத்தப்பட வேண்டிய கால அளவு?<br><br>15.What is the repayment tenure under the scheme? | 5 ஆண்டுகள் அல்லது இந்திய ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதலின்படி வங்கிகள் பரிந்துரைக்கும் கால அளவுக்குள் திரும்ப செலுத்தப்பட வேண்டும்.<br><br>Repayment tenure will be 5 years or as fixed by the bank in accordance with the guidance of RBI. |
| 16. அதிகபட்ச மானியமாக அரசாங்கம் வழங்கும் தொகை<br><br>16.Quantum of Maximum Government subsidy | திட்ட மதிப்பீட்டில் 25% அதிகபட்சமாக ரூ,1,25,000 வரை அரசு மானியமாக வழங்கப்படுகிறது.<br><br>25% subsidy on project cost with a maximum limit of Rs.1,25,000/-. |
| 17. அரசு மானிய தொகையை வங்கிகளில் நிறுத்தி வைக்கப்படும் கால அளவு?<br><br>17.What is the lock in period for Govt subsidy? | 3 ஆண்டுகள்<br><br>3 years |
| 18. ஒரு கடன் திட்டத்திற்கு இரு வேறு நிதி நிறுவனங்கள்/வங்கிகளில் கடன் பெற இயலுமா?<br><br>18. Can the project be financed jointly from two different sources( Bank/ Financial Institutions)? | இயலாது.<br><br>No. It is not eligible |
| 19. வேறு அரசு திட்டங்களில் பயன்பெற்ற பயனாளிகள் UYEGP திட்டத்தின் கீழ் கடன் பெற இயலுமா?<br><br>19.Whether the applicant can avail loan under UYEGP scheme when he had already availed benefit under other Govt Schemes? | UYEGP திட்டத்தின் கீழ் கடன் பெற விரும்பும் பயனாளிகள் இதற்கு முன் மத்திய/மாநில அரசின் திட்டங்களில் மானியத்துடன் கூடிய கடன் பெற்றிருத்தல் கூடாது.<br><br>In order to apply loan under UYEGP, the beneficiary should not have availed loan/ subsidy under any other State/ Central Govt scheme. |
| 20. ஒரு நபருக்கு மேல் கூட்டாக கடன் பெற தகுதியுண்டா<br><br>20.Whether partnership concern eligible to avail loan | இல்லை,தனி நபர் மட்டுமே கடன் பெற தகுதியானவர்.<br><br>No, Individual alone is eligible. |
| 21. இத்திட்டத்தில் கடன் பெற திட்ட அறிக்கை தயார் செய்திட உதவிகள் உள்ளதா?<br><br>21.What is the help line available for the beneficiary in preparation of the project? | இத்திட்டத்தில் கடன் பெற திட்ட அறிக்கை தயார் செய்திட மாதிரி திட்ட அறிக்கை மற்றும் திட்ட அறிக்கை தயார் செய்யும் படிவம் ஆகியவை UYEGP திட்ட இணைய தளத்தில் உள்ளது.<br><br>Model project profile and Project template is available to guide the entrepreneur in preparation of Project Report in this web site |

| | |
|---|---|
| | |
| 22. இத்திட்டத்தில் கடன் பெற விரும்பும் பயனாளிகளை தெரிவு செய்வது எப்படி?<br><br>22.How are the beneficiaries selected under this scheme? | இத்திட்டத்தில் கடன் பெற விரும்பும் பயனாளிகளை மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் தலைமையிலான UYEGP திட்ட நேர்காணல் குழு மூலம் தெரிவு செய்து வங்கிகளுக்கு பரிந்துரை செய்யப்படும்.<br><br>Beneficiaries will be selected through interview process by the District Task Force Committee headed by the General Manager of the concerned District Industries Centre/Regional Joint Director, Chennai. |
| 23. UYEGP திட்ட நேர்காணல் குழு உறுப்பினர்கள் யார்?<br><br>23.Who are all the members of Task Force Committee? | UYEGP திட்ட நேர்காணல் குழு<br>தலைவர் பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம்/மண்டல இணை இயக்குநர் தொழில் வணிகத்துறை, சென்னை<br>உறுப்பினர்கள்<br>1. மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர்,<br>2. மாவட்ட தாட்கோ மேலாளர்,<br>3. மாவட்ட வங்கி ஒருங்கிணைப்பாளர்கள்<br>4. குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் சங்க பிரதிநிதிகள்<br>5. தேசிய சிறு தொழில் வளர்ச்சி கழக பிரதிநிதிகள் ,<br>6. மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர்<br>7. திட்ட அலுவலர், மாவட்ட கிராமப்புற வளர்ச்சி திட்டம்.<br>8. திட்ட அலுவலர், மகளிர் திட்டம்<br><br>Task force Committee<br><br>Chairman : General Manager, District Industries Centre/ Regional Joint Director, Chennai-32<br>Members :<br>1. Lead bank District Manager,<br>2. Tamil Nadu Adi Dravidar Housing and Development Corporation Limited (TAHDCO)<br>3.District Coordinators from Leading Banks in the Districts<br>4.Representative from District Micro, Small and Medium Enterprises Associations<br>5.Representative from National Small Industries Corporation Ltd / Micro, Small and Medium Enterprises Development Institute<br>6.District Employment Officer<br>7. Representative of Project Officer, District Rural Development Agency<br>8. Representative of Project Officer, Magalir Thittam. |